# வென்றவேத்வில் தமிழ் கல்வி நிலையம்

பெயர்----------------------------------------------------------

**Year 5 Term 2** **Sample test -15/6/2024**

**1.கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களுள் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து கிறிட்ட இடத்தில் எழுதுக.**

தமிழ், சீதை, இலக்குமணன, தசரதசக்கரவர்த்தி, கம்பர்,

1. அயோத்தியை அரசு செய்த மன்னனின் பெயர் -----------------------------------.
2. ----------------------------------- இராமாயணத்தை எழுதினார்.
3. கம்பர் ஒரு ------------------------------------- புலவர்.
4. சனகமகாராசாவின் மகளின் பெயர் -------------------------------------.
5. இராமனுடன் காட்டிற்கு சென்ற சகோதரன் பெயர் ------------------------------.

(புள்ளிகள் 5x2 = 10)

**2. கீழ்வரும் ஒத்த கருக்துள்ள சொற்களை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**பாட்டு, கல்யாணம், வருடங்கள், கோயில், ஆனந்தம், துக்கம்**

1. மகிழ்ச்சி ------------------------------------------
2. திருமணம் ------------------------------------------
3. கவி ------------------------------------------
4. ஆண்டுகள் ------------------------------------------
5. ஆலயம் ------------------------------------------

(புள்ளிகள் 5x2= 10)

**3. சேர்த்து எழுதுக.**

1. வீடு + கூரை ----------------------------------------------
2. திருமணம் + முறை --------------------------------------------
3. மா + இலை --------------------------------------------
4. பாடம் + புத்தகம் ---------------------------------------------
5. ஓடி + சென்றான் ----------------------------------------------

(புள்ளிகள் 5x2 = 10)

**4. பின்வரும் வாக்கியங்களில் தடித்த சொல்லினை பொருத்தமான காலத்திற்கு மாற்றி எழுதுக.**

1. நான் இன்று **ஓடுகிறேன்.**

   நான் நேற்று -----------------------------------
2. பெரியப்பா நேற்று வீட்டிற்கு **வந்தார்.**

   பெரியப்பா நாளை வீட்டிற்கு --------------------------------------
3. நாங்கள் நாளை பாடம் **படிப்போம்.**

   நாங்கள் நேற்று பாடம் -----------------------------------------
4. நானும் அம்மாவும் நேற்று கோயிலுக்குப் **போனோம்.**

   நானும் அம்மாவும் நாளை கோயிலுக்குப் ---------------------------------
5. கண்ணனும், வாணியும் இன்று கன்பரா **செல்கிறார்கள்**.

   கண்ணனும், வாணியும் நாளை கன்பரா -------------------------------------

(புள்ளிகள் 5x3 = 15)

**5. கீழ் வரும் எதிர்ச்சொற்களை தேர்ந்தெடுத்து எழுதுக.**

பகல், தாழ்ந்த, தீமை, பலர், நடுவில். கடைசியில், பகை

1. முதலில் ---------------------------------------------
2. சிலர் ----------------------------------------------
3. உயர்ந்த ----------------------------------------------
4. நன்மை ------------------------------------------------
5. இரவு --------------------------------------------------

(புள்ளிகள் 5x2= 10)

**6. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை கண்டறிந்து கீழே உள்ள அட்டவணையில் எழுதுக.**

1. திருடன் பணத்தை திருடினான்.
2. சிறுவன் பரிசைப் பெற்றான்.
3. அம்மா சோறு சமைத்தார்.
4. அப்பா மோட்டார் வண்டி ஓட்டினார்.
5. பாரதியார் பாப்பாப் பாட்டு பாடினார்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 11. | | | |
| 22. | | | |
| 33. | | | |
| 44. | | | |
| 55. | | | |

(புள்ளிகள் 5x3 = 15)

**7. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றை கண்டறிந்து கீழே உள்ளஅட்டவணையில் எழுதுக.**

1. கண்ணன் வந்தான்.
2. மரம் முறிந்தது.
3. சூரியன் உதித்தது.
4. அவன் சாப்பிட்டான்.
5. மாமா வந்தார்.

| | பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|---|
| 11. | | |
| 22. | | |
| 33. | | |
| 44. | | |
| 55. | | |

(புள்ளிகள் 5x2 = 10)

**8. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

என் நண்பன் கண்ணன் மலேசியாவில் வசிக்கிறான். அவன் அழகிய இடங்களைப் பார்க்க விரும்பினான். அவன் இந்த வருடக் கடைசியில் சிங்கப்பூருக்கு வருவான். அவனுடன் அவனது பெற்றோரும் வருவார்கள். அவர்கள் எங்கள் வீட்டில்தான் தங்குவார்கள்.

எங்கள் அண்ணன் அவர்களைச் செந்தோசாத் தீவுக்கு அழைத்துச் செல்வார். அவர்கள் செந்தோசாத் தீவுக்கு கம்பிவண்டியில் பயணம் செய்வார்கள். அதன்பின் அவர்கள் மெழுகுபொம்மைக் காட்சிக்கூடத்திற்குச் செல்வார்கள். அங்குள்ள பல காட்சிகளைச்சுற்றி பார்த்து மகிழ்வார்கள். தாங்கள் பார்க்கும் இடங்களைப் புகைப்படம் எடுப்பார்கள்.

1. கண்ணன் எங்கு வசிக்கிறான்?

-----------------------------------------------------------------------------------------------------------

2. அவன் எப்போது சிங்கப்பூருக்கு வருவான்?

-----------------------------------------------------------------------------------------------------------

3. கண்ணனும் அவன் பெற்றோரும் எங்கே செல்வார்கள்?

-----------------------------------------------------------------------------------------------------------

4. அவர்கள் எதில் பிரயாணம் செய்வார்கள்?

-----------------------------------------------------------------------------------------------------------

5. அவர்கள் செந்தோசாத் தீவில் எந்த காட்சிக்கூடத்திற்கு செல்வார்கள்?

-----------------------------------------------------------------------------------------------------------

(புள்ளிகள் 5x4 = 20)